[12th July 1962

செய்து, இதையாவது அங்கே வைக்கமுடியும் என்று முடிவுக்கு வந்தோம். ஆனால், அங்கே போதிய அளவு களிமண்ணை கிடைக்கவில்லையென்றால், 25 லட்சம் ரூபாய் வரை அங்கே போட்டு விட்டு, கடைசியாக தொழிற்சாலையை வைத்து நடத்த முடிய வில்லை என்ற நிலைமையை உண்டாக்கக் கூடாது என்ற காரணத் திற்காக மாற்றிவிட்டோம். இருந்தாலும், அந்த இராமநாத புரம் கிழக்குப் பகுதியில் வேறு ஏதாவது தொழிற்சாலைகள் வைப் பதற்கான முயற்சிகளை சர்க்கார் எப்போதும் எடுத்துக்கொண்டே இருக்கிறது. கனம் அங்கத்தினருக்கு ஏதாவது ஆலோசனை இருந்தாலும், அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக் கிறேன்.

அத்தியாவசியப் பொருள்கள் (விலைக் கட்டுப்பாடு)

*249 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அத்தியாவசியமான பொருள்களின் விலைகளைக் கட்டுப் படுத்த குழு ஒன்று அமைக்க உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI P. KAKKAN : (அ) No, Sir.

(இ) Does not arise.

Tuticorin Port (development)

* 250 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the present stage of the scheme to develop Tuticorin into a major port; and

(*b*) the prospect for Sethusamudram Project?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The scheme for the development of the Tuticorin Port into a major port alongside harbour has been included in the Central Sector of the Third Five-Year Plan. The project wil be implemented by the Ministry of Transport, Government of India. They have taken steps to collect the data required for designing the harbour.

(*b*) The work of putting down trial bores along the alignment for the Sethusamudram Canal to collect data regarding the sub-soil strata has been completed. An estimate for the project based on the data now collected is being prepared by the Chief Engineer (General). Further action to process the project with the Government of India will be taken after the estimate for the project is in hand.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தூத்துக்குடி துறைமுக அபி விருத்தி வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டனவா? இதுவரைக்கும் எவ்வளவு ரூபாய் அதற்குச் செலவழிக்கப்பட்டிருக்கும்?

12th July 1962]

கனம் திரு. வி. ராமையா : வேலைகள் தொடங்கப்பட்டு விட்டன. முக்கியமாக "போர்ஸ்" போடவேண்டிய வேலை பூர்த்தியாகிவிட்டது. ஆனால் இதுவரைக்கும் எத்தனை ரூபாய் செலவாகியிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சேதுசமுத்திரத் திட்டத்திற்கு மறுபடியும் எஸ்டிமேட் தயாரிக்கவேண்டிய காரணம் என்ன? ஏற்கனவே எஸ்டிமேட் தயாரித்து இருக்கிறார்கள் இல்லையா? மறுபடியும் தயாரிக்கவேண்டிய அவசியம் என்ன?

கனம் திரு. வி. ராமையா : ஏற்கனவே இரண்டு மூன்று நிபுணர்கள் கமிட்டி இதுபற்றி பலவிதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு இறுதி முடிவு எடுக்கவேண்டும் என்ற காரணத்திற்காக 'இன்டரிம் போர்ட் கமிட்டி'—நிபுணர் குழுவைவிட்டு மறுபடியும் பரிசீலனை செய்து, அதை மறுபடியும் எப்படி அமைக்க வேண்டுமென்பதற்கு, அந்த வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு எவ்வளவு ஆகும் என்பது பற்றி ஆராய்ந்து வருகிறது. முடிவு தெரிந்த பிறகு மேலும் நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிக்கும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சேதுசமுத்திரத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்பதற்காக இந்த மறுபரிசீலனை நடக்கிறதா? அல்லது அதை ஒத்திப் போடுவதற்காக இந்தப் பரிசீலனை நடக்கிறதா?

கனம் திரு. வி. ராமையா : ஒத்திப் போடவேண்டுமென்றால் இந்தப் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஒரு திட்டத்தை—அது சிறியதாக இருந்தாலும், பெரியதாக இருந்தாலும்—அமைப்பது என்றால் அதுபற்றி எல்லாவிதமான பூர்வாங்க ஆராய்ச்சிகளும் செய்யப்படவேண்டும். உடனடியாக எதையும் ஏற்படுத்திவிட முடியாது. ஒரு திட்டத்தை நாம் வலியுறுத்த வேண்டும் என்றால் அந்தத் திட்டத்தின் அவசியம், அதற்கு ஆகும் செலவு, அதனால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அனுகூலம் ஆகிய எல்லாவற்றையும் நன்கு பரிசீலனை செய்தாகவேண்டும். குறிப்பாக தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றி நீண்ட ஆராய்ச்சி நடத்தினோம். அதனால் கொஞ்சம் கால தாமதம் ஏற்பட்டது என்றாலும் அத்திட்டம் மிக லாபகரமானதாக, வசதியானதாக அமைந்திருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் நாம் நினைத்ததை இப்போது முடிவு செய்திருக்கிறபடி ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும். இப்போது அமைந்திருக்கக்கூடிய முறை மிகவும் பொருத்தமாக இருக்கிறது. இன்றைக்கு சேதுசமுத்திரத் திட்டமும் இத் துறைமுகத்துடன் சேர்ந்து செயல்படும்போது இப்போது அமைந்திருக்கும் முறை மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.

Sri M. S. SELVARAJAN : Sir, will the Hon. Minister be pleased to explain what exactly is the Sethusamudram Project and in what way it could be connected or linked with the Tuticorin Harbour?

[12th July 1962

THE HON. SRI V. RAMAIAH : To enable me to give a detailed answer, I wish that the hon. Member puts a separate question. because it is a big project which everybody has to understand or. when I get another opportunity to move the relevant Demand, I shall try to explain it.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி வேலையில் புது அமைப்பு என்று கூறினார்கள். அதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன். தூத்துக்குடி துறை முகத் திட்டமும், சேதுசமுத்திரத் திட்டமும் ஒன்றாக இணைப் புற்றது என்று கூறுகிறார்கள். ஒன்றாக இணைப்புற்றதுதானா? அல்லது வேறு, வேறா ?

கனம் திரு. வி. ராமைய்யா : இரண்டும் ஒன்றோடொன்று இணைப்புற்றதுதான் என்பதை ஒப்புக்கொள்கிறேன். தூத்துக்குடி துறைமுகம் உண்மையில் நல்ல பலன் தரவேண்டுமென்றால் சேது சமுத்திரத் திட்டம் வரவேண்டும். இரண்டும் ஒரே நேரத்தில் செய்யப்படவேண்டும் என்ற அவசியம் இல்லை. அப்படியானால் அதற்கு வேண்டிய நிபுணர்கள் உதவி, பொருள்கள் உதவி எல்லாம் நமக்குக் கிடைத்தாகவேண்டும். ஆகவே தனித் தனியாக எடுத்துக்கொள்ளலாம். முதலில் தூத்துக்குடி துறைமுகத்தில் உள்ளடங்கியிருந்த பாறைகளை எல்லாம் உடைத்து, அபிவிருத்தி செய்வதாக இருந்தது. அதனால் செலவு மிக்க அதிகமாயிருந் திருக்கும். அதோடு கொஞ்சம் வசதிக் குறைவாகக்கூட இருந் திருக்கும். இப்போது கடலுள் 2 மைல் வரை விஸ்தரித்து இத் துறைமுக வேலை நடைபெறுகிறது. இந்த அமைப்பு அதிக வசதி யுடையதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கே முக்கியமான திட்டமாக இருக்கும் தூத்துக்குடி, சேதுசமுத்திரத் திட்டம் இருக்கிறபடியால் அதன் விவரங்கள் அடங்கிய ஓர் அறிக்கையை இந்தச் சபைக்கு கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப் பிக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. வி. ராமைய்யா : இந்தத் திட்டத்தை நன்றாகப் பரிசீலனை செய்தால் இதன் முக்கியத்துவம் தமிழ்நாட்டோடு நின்றுவிடவில்லை. நமது தேசத்திற்கு மட்டும் இந்தத் திட்டம் லாபகரமானதாக அமைவதாக இருக்காது. கடல் போக்கு வரத்தில் உலக நாடுகளுக்கு எல்லாம் இது மிகவும் உபயோகமான தாக இருக்கும். மேலும் இதுபற்றிய விவரங்களைக் கொடுப்பதற்கு நான் வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்வேன்.

கரும்பு

*** 251 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் (திரு. வெ. கிருஷ்ண மூர்த்தி—சார்பாக) :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரும்பு விலை நிர்ணயம் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கம் ஏதாகிலும் யோசனைகள் தெரிவித்ததா ?